# அரை ஏக்கர்… 18 மாதங்கள்.. ரூ.2 லட்சம்

# பூரிக்க வைக்கும் பூனைத்தலைக் கத்திரி!

நம் நாட்டில் நெல்லுக்கு அடுத்தபடியாக, அதிக ரகங்கள் இருக்கும் ஒரு பயிர் என்றால்.. அது கத்திரியாகத்தான் இருக்கும். புளியம்பூ கத்திரி, பவானிக் கத்திரி, கோவை வரிக்கத்திரி, வெள்ளை வரிகத்திரி, பச்சை வரிக்கத்திரி.. என இப்போதும் கூட பல வகையான நாட்டுக் கத்திரி ரகங்கள் நம்மிடையே புழகத்தில் உள்ளன. மணமும் சுவையும் மருத்துவ குணமும் கொண்ட நாட்டுக் கத்திரிகள் ஒவ்வொரு பகுதியிலும் அந்த மண்ணுக்கேற்றப் பயிராக விளைந்தன. ஆனால், ஒரு கட்டத்தில் வீரிய ரகங்களின் அதிரடி வருகயைால், காலகாலமாக அருமையான விளைச்சலையும், அடுத்த போகத்திற்கான விதைகளையும் கொடுத்துக் கொண்டிருந்த நாட்டு ரகங்களில் பெரும்பாலானவை, படிப்படியாக அழிந்துவிட்டன. இன்று, விதைகளுக்காக கம்பெனிகளிடம் கையேந்தி நிற்கிறார்கள், விவசாயிகள்.

இத்தகைய கொடுஞ்சூழலிலும்… நாட்டு ரகங்களை விடாமல் காப்பாற்றி சாகுபடி செய்துவரும் சில விவசாயிகள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களில் ஒருவராக, ‘பூனைத்தலைக் கத்திரி’ என்று அழைக்கப்படுகிற ‘வெள்ளைவரி உருண்டைக் கத்திரி’ என்கிற நாட்டு ரகத்தைப் பயிர் செய்வதுடன், பிற விவசாயிகளுக்கு விதைகளையும் கொடுத்து வருகிறார், திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை அருகேயுள்ள சின்ன பாப்பனூத்து கிராமத்தைச் சேர்ந்த இளம் விவசாயி வி.எம்.ராமநாதன்.

உடுமலைப் பேட்டை – ஆனைமலை சாலையில் பயணித்தால், பன்னிரண்டாவது கிலோ மீட்டரில் இடது பக்கம் இருக்கிறது, சின்ன பாப்பனூத்துப் பிரிவு. தென்மேற்குப் பருவமழை, காற்றுடன் கலந்து பன்னீர் தெளித்து, சிலுசிலுத்த மழைப்பொழுதில் கத்திரி வயலில் ராமநாதனைச் சந்தித்தோம்.

**நாடி வந்த நாட்டு ரகம்!**

“எனக்கு இதுதான் சொந்த ஊர். டிப்ளமோ படித்துவிட்டு, வேலை தேடி அலையாமல் அப்பாவுக்குத் துணையாக விவசாயத்தில் இறங்கிவிட்டேன். 30 ஏக்கரில் விவசாயம் செய்கிறோம். அதில் 25 ஏக்கரில் தென்னை இருக்கு. மீதி 15 ஏக்கரில் சின்ன வெங்காயம், தக்காளி, கொத்தமல்லி, மிளகாய், கத்திரி என்று காய்கறிகளை மாற்றி மாற்றி சாகுபடி செய்கிறோம்.

போட்ட விதை பொல்லாப்பில்லாமல் விளையும் வளமான செம்மண் பூமி, ஆரம்பத்தில் நாட்டு ரக காய்கறிகளைத்தான் விளைய வைத்தோம். காலப்போக்கில் எல்லோரையும் போல் வீரிய விதைக்கு நாங்களும் மாறிவிட்டோம். கத்திரியிலும் கோ 1, கோ 2 ரகங்களைத்தான் நடவு செய்தோம். ஆனால், நாட்டு ரக கத்திரி என்னைத் தேடி வந்தது.

லட்சும் பாட்டி என்று ஒருத்தர் வீட்டிற்கு விருந்துக்கு போயிருந்தோம். அதில் எங்களுக்கு பரிமாறிய எண்ணெய் கத்தரிக்காய் குழம்பு அபாரமான சுவையாக இருந்தது. சாப்பிட்டு முடித்து பாட்டியம்மாவிடம் ‘அந்தக் கத்திரிக்காயை எங்க வாங்கினீங்க என்று கேட்டோம். இங்கு தான் வாங்கினேன் என்று சிரித்துக் கொண்டே அவங்க வீட்டின் கொல்லைப் புறத்திற்கு கூட்டிட்டுப் போயி, அங்கு இருந்த செடிகளைக் காட்டினாங்க. பூனைத்தலை வடிவத்தில் கிரிக்கெட் பந்து அளவுக்கு ஊதா நிறத்தில் வெள்ளை வரிகள் ஓடிய காய்கள் தொங்கி கொண்டு இருந்தது. செடிகளைப் பார்த்து அசந்துவிட்டேன். இது ‘பாரம்பரிய ரகம். ரொம்ப வருடமாக எங்க வீட்டுத் தோட்டத்தில் இருக்கு. நான்கு பழம் தருகிறேன். விதை எடுத்து வீட்டில் நட்டு நீங்களும் சாப்பிடுங்கள் என்று சொல்லி கத்தரிப் பழங்களைக் கொடுத்தாங்க” என்றார்.

**நேரடிப் பராமரிப்பு அவசியம் !**

அந்தப் பழங்களில் எடுத்த விதைகளில் நாற்று எடுத்தில் ஐந்து பாத்திக்குத் தேவையான அளவுக்கு நாற்று கிடைத்தது. அதில் இருந்து, விதை எடுத்து இப்போது அரை ஏக்கரில் பூனைத்தலைக் கத்திரியைச் சாகுபடி செய்திருக்கிறோம். 18 மாதத்தில் 20 டன் மகசூல் கிடைத்திருக்கு. சராசரியாக கிலோவுக்கு 10 ரூபாய் என்கிற விலையில் 2 லட்ச ரூபாய் வருமானம் கிடைத்திருக்கு. அதில் 70 ஆயிரம் ரூபாய் செலவு போக, ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் லாபம். பருவ நிலை, தண்ணீர், விற்பனை வாய்ப்பு மூன்றும் நன்றாக இருந்ததால் எதிர்பார்த்தைவிட அதிகமாகவே லாபம் கிடைத்திருக்கு. எவ்வளவு வேலையாட்கள் இருந்தாலும், கண்கொத்திப் பாம்பாக நாமளும் வயலைப் பார்த்துக்கொண்டே இருந்தால்தான் விவசாயத்தில் ஜெயிக்க முடியும் என்றார்.

விளைந்த காய்களில் ஊக்கமான காய்களாகப் பார்த்து செடிகளில் பழுக்க விட்டிருக்கிறோம். இதில் இருந்தே விதை எடுத்து ஆர்வமுள்ள விவசாயிகளுக்குக் கொடுக்கலாம் என்று இருக்கிறோம். இப்போது நான், ‘இயற்கைப் பாதி… செயற்கைப் பாதி’ என்று விவசாயம் செய்கிறேன். இதை முழுவதுமாக இயற்கை முறையிலும் சாகுபடி செய்யலாம். அடுத்த போகத்திலிருந்து, இந்த நாட்டு ரகத்தை மட்டுமாவது முழு இயற்கை முறையில் சாகுபடி

செய்யலாம் என்று நினைத்திருக்கிறேன். காணாமல் போன இந்த ரகம் திரும்பவும் பரவணும் என்பதுதான் எங்கள் கனவு' என்றார்.

**இப்படித்தான் சாகுபடி செய்யணும் !**

**பூனைத்தலைக் கத்திரி சாகுபடி பற்றி ராமநாதன் சென்ன குறிப்புகள்**

ஆண்டு முழுவதும் நடவு செய்யலாம். மொத்த சாகுபடி காலம் 18 மாதங்கள். இதில் 16 மாதங்கள் மகசூல் இருக்கும். பொதுவாக கத்திரிக்கு நாற்று நடவுதான் சிறந்தது. அரை ஏக்கரில் சாகுபடி செய்ய, 10 அடி நீளம், 3 அடி அகலத்தில் மேட்டுப்பாத்தியில் நாற்றங்கால் அமைத்துக் கொள்ள வேண்டும். மண்கட்டிகள், பொடிக்கற்களை அப்புறப்படுத்தி, 10 கிலோ சலித்த தொழுவுரத்தைக் கொட்டி இறைத்து, அதன் மீது 15 கிலோ செம்மண்ணைக் கொட்டி இரண்டையும் கலக்கி சமன்படுத்த வேண்டும். பிறகு, பாத்திக்குள் விதைகளைத் தூவி, மண்மூடும் அளவுக்குக் கீறிவிட்டு, தொடர்ந்து தண்ணீர் தெளித்து வரவேண்டும். 15-ம் நாளில் களைகளை அகற்றி, ஒரு கிலோ வேப்பம் பிண்ணாக்குக் கரைசலை பாசனநீரில் கலந்துவிட வேண்டும். இது, வேர்புழுத் தாக்குதலைக் கட்டுப்படுத்தும். பூச்சிகள் தாக்கினால், பரிந்துரைக்கப்படும் பூச்சிகொல்லியைத் தெளிக்கலாம். 25 நாட்கள் முதல் 30 நாட்களுக்குள் நாற்றுகள் தயாராகிவிடும்.

புழுதியாக உழவு செய்த அரை ஏக்கர் நிலத்தில் 5 டன் தொழுவுரத்தைக் கொட்டி உழவு செய்ய வேண்டும். இரண்டடி அகலம் முக்கால் அடி உயரத்தில் வரிசையாக மேட்டுபாத்திகள் அமைத்து, சொட்டு நீர்ப்பாசன வசதி செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு பாத்திக்கும் இரண்டு அடி இடைவெளி இருக்க வேண்டும். பாத்திகளை ஈரமாக்கி, தயாராக உள்ள நாற்றுகளை, பாத்திகளின் இரண்டு ஓரங்களிலும் செடிக்குச் செடி 3 அடி இடைவெளி இருப்பது போல் நடவு செய்ய வேண்டும். தொடர்ந்து மண்ணின் ஈரப்பதத்தைப் பொறுத்து பாசனம் செய்தால், போதுமனாது.

25-ம் நாள் களை எடுத்து, பரிந்துரைக்கப்படும் ரசாயன உரத்தை இட வேண்டும். தொடர்ந்து 25 நாட்களுக்கு ஒரு முறை பரிந்துரைக்கப்படும் அளவுக்கு கலப்பு உரங்கள், நுண்ணூட்ட உரங்களை மாற்றி மாற்றி, கொடுத்து வர வேண்டும். எக்காரணம் கொண்டும் தழைச்சத்து மிகுந்த உரங்களை அதிகம் கொடுக்கக் கூடாது. அதனால், ஏற்படும் செடிகளின் தேவையற்ற வளர்ச்சி, காய்ப்புழுக்களைக் கைதட்டி அழைக்கும். இதில் அதிகம் பூச்சிகள், நோய்கள் தாக்கும். தேவைப்படும் சமயத்தில் பரிந்துரைக்கப்படும் பூச்சிக் கொல்லிகள், மருந்துகளைத் தெளித்து

பூச்சிகள், நோய்களைக் கட்டுப்படுத்தலாம். 60-ம் நாள் முதல் மகசூல் எடுக்கலாம். ஒரு செடியிலிருந்து, மொத்தமாக 6 கிலோ காய் கிடைக்கும். அரை ஏக்கரில் 20 டன் அளவுக்கு மகசூல் கிடைக்கும்.

**நாற்றங்கால் மானியம் 4 ஆயிரம் ரூபாய்!**

இந்த ரக கத்திரி குறித்துப் பேசிய உடுமலைப்பேட்டை வேளாண்மைத் தோட்டக்கலை உதவி இயக்குநர் இளங்கோவன், “விதைகள் எளிதில் கிடைக்காத இந்த ரக கத்திரி, வீரிய ரகங்களுக்கு இணையாக மகசூல் தரக்கூடியது. இதுபோன்ற நாட்டு ரகங்கள் அனைத்து விவசாயிகளுக்கும் போய் சேர வேண்டும் என்ற நோக்கில் முன்னோடி விவசாயிகளை அழைத்து செயல் விளக்கப் பண்ணை, பயிற்சிகள் அளித்து வருகிறோம். நாட்டு ரக விதைகளைச் சேகரித்து விவசாயிகளுக்குக் கொடுத்தும் வருகிறோம்.

நாற்றங்கால் அமைத்து மற்றவர்களுக்கு நாற்று கொடுக்க விரும்பும் விவசாயிகளுக்கு, 4 ஆயிரம் ரூபாய் நாற்றங்கால் மானியமும் வழங்கி வருகிறோம். முன்னோடி விவசாயி ராமநாதன், ஆத்மா திட்டத்தின் கீழ் மானியம் பெற்று நாற்றங்கால் உற்பத்தி செய்யும் தொழில்நுட்ப பயிற்சியும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது என்றார்.

தொடர்புக்கு

வி.எம்.ராமநாதன்

செல்போன்: 94431-67078

இளங்கோவன் , செல்போன்:98420 -07125

**ஆதாரம் : பசுவை விகடன் வெளியீடு 10.09.2014 www.vikatan.com**